சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – அடையாறு பூங்கா திட்டம் - அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக் குழுவில் கூடுதல் உறுப்பினர்கள் நியமித்தல் மற்றும் உறுப்பினர் - செயலர் நியமித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 23 நாள்: 18.02.2008

சர்வஜித், மாசி –6
திருவள்ளுவர்ஆண்டு–2039

படிக்கவும்:

1. அரசு ஆணை (நிலை) எண்.632, வருவாய்த் துறை, நாள் 22.12.2003.
2. அரசு ஆணை (நிலை) எண்.278, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 06.07.2004.
3. அரசு ஆணை (நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.11.2005.
4. அரசு ஆணை (நிலை) எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 28.03.2006.
5. அரசு ஆணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 11.10.2006.
6. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகரபுற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனம் கடிதம் எண்.APT/Trustees/2007/03, நாள் 28.01.2008.

☯☯☯

**ஆணை:**

மேலே வரிசை எண்.5ல் படிக்கப்பட்ட அரசாணையில் அடையாறு பூங்கா திட்டப்பகுதியை பராமரிக்க அரசு தலைமைச் செயலர் தலைமையிலான ஒரு பொறுப்பாட்சிக் குழுவினை நியமித்தது. தற்போது மேற்படி பொறுப்பாட்சிக் குழு 22.03.2007ல் நடந்த தனது கூட்டத்தில் தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் பொறுப்பாட்சிக்குழுவில் உறுப்பினர் ஆக சேர்த்து உறுப்பினர் செயலர் ஆக நியமிக்க தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

2. மேலும் தற்போது அடையாறு பூங்கா திட்டத்தை நிர்வகித்து வரும் தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் அடையாறு பூங்கா பெருந்திட்டம் தயாரிக்கும் போது அடையாறு பகுதியில் நடைபெறும் மீன்பிடி தொழில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும், அடையாறு பூங்கா திட்டம் நிறைவேற மீன்வளத் துறையும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்பதால் அடையாறு

பூங்கா பொறுப்பாட்சிக்குழுவில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை செயலரையும் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் எனவும் கோரி உள்ளார்.

3. மேற்குறித்த சூழ்நிலையில் மேலே பத்தி-1 மற்றும் 2–ல் கண்ட கருத்துருக்களை ஏற்றுக் கொள்ள அரசு தீர்மானித்து உள்ளது. அதன்படி அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக் குழுவில் செயலர், கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத்துறை அவர்களையும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகரபுற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனம் அவர்களையும் உறுப்பினர்களாக நியமித்தும், அக்குழுவின் உறுப்பினர்-செயலாளராக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனம், அவர்களை நியமித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்.

பெறுநர்
செயலர், கால்நடை பராமரிப்பு (ம) மீனவளத்துறை, சென்னை-9.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு
நிதிசேவை நிறுவனம், சென்னை-17.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
செயலர், நிதி / பொதுப்பணித்துறை / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/ நெடுஞ்சாலை / சுற்றுச்சூழல் மற்றும் வனம், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.1) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.